**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.125/2016**

2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 28.01.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாந்தி | ஜாதி | : |
| க/பெயர் | : கண்ணன் | மதம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | வயது | : |

பி.சா.1 முன்னிலை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. தாவா வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப் பட்டவைதான். நிரூபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் தற்போது ரெங்கநாதபுரத்தில் வசித்து வருகிறேன். எனது கணவரும் அதே கிராமத்தில் என்னுடன் தான் வசித்து வருகிறார். வாதி ராஜேஸ்வரி அதே கிராமத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

2. வாதியை எனக்கு நன்கு தெரியும். அவரது குடும்பத்தினரை பற்றியும் நன்கு தெரியும். வாதி எனது பெயரில் தாக்கல் செய்துள்ள வழக்கு விவரங்கள் குறித்து எனக்கு தெரியும். வாதி தரப்பு தாக்கல் செய்துள்ள வழக்குரையை ஆட்சேபணை செய்து எனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதிலுள்ள விவரங்கள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவைதான். வாதி ராஜேஸ்வரி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியின் சொத்தை அவரது மாப்பிளை விற்பனை செய்துவிட்டார். அது தொடர்பாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. தாவா சொத்தின் சுவாதீன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதியின் கணவர் பற்றி எனக்கு தெரியாது. 1 ஆண்பிள்ளை 2

பெண்பிள்ளை இருக்கிறார்கள். மொத்தம் 3 நபர்கள் வாரிசுகள் ஆவார்கள். வாதி ராஜேஸ்வரி உயிருடன் தான் இருக்கிறார். மகன் திருக்குமரன் இறந்துவிட்டார்கள். மகள்கள் சியாமளா மற்றும் கற்பகவள்ளி. எனக்கு தாவா சொத்தை விற்பனை செய்த வாதியின் மாப்பிள்ளை பெயர் தமிழரசன். வாதிக்கு சொந்தமான சொத்தை அவரது மாப்பிள்ளை விற்பனை செய்து விட்டதாக கூறி வாதி தாக்கல் செய்துள்ள வழக்கை எதிர்த்து கட்சி செய்து வருகிறேன் என்றால் சரிதான். தமிழரசன் சியாமளாவின் கணவர் ஆவார். தாவா சொத்தின் விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் சரியாக ஞாபகமில்லை.

4. நான்கெல்லை விவரங்கள் தெரியும். கிழக்கில் பிரபு, மேற்கில் குணசேகரன், வடக்கில் ராமதாஸ். தெற்கில் செல்வராஜ்க்கு சொந்தமான சொத்துக்கள் உள்ளது. தாவா சொத்து விவசாய நிலங்களாக உள்ளது. இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி எனது கணவர் ஆவார். எனது கணவருக்கு தாவா சொத்தின் புல எண் குறித்து தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் கோவிந்தராஜ்க்கு சொந்தமானதாகும். கோவிந்தராஜ் என்பவரிடமிருந்து நாங்கள் நேரிடையாக கிரையம் பெற்றறோ என்றால் இல்லை. கோவிந்தராஜ்என்பவரிடமிருந்து மூல பத்திரத்தை வைத்து தமிழரசன் எனது பெயருக்கு எழுதிக்கொடுத்தார். வாதியின் மகன் திருகுமரன் என்பவரை எனக்கு தெரியும்.

(பிரதிவாதி தரப்பில் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.02.04 11:12:33 +0530

District Munsif

Mannargudi.